# A

**19733** **120 MINUTES**

1. குறுந்தொகையில் மிக அதிகமாக பாடல் பாடிய பெண்பாற் புலவர் யார்?
   A) ஆதிமந்தி B) நன்னாகையார்
   C) ஊண்பித்தை D) ஔவையார்

2. ஆராய்ந்தெழுதுக.
   1. செய்யுளின் தொடக்கம் மன்னர் வாழ்த்து அமைப்புமுறை
   2. தொகைநூல்களுள் முதலில் தொகுக்கப் பெற்ற நூல் குறுந்தொகை
   3. ஓரங்க நாடக அமைப்பு குறுந்தொகையின் சிறப்பு
   4. குறுந்தொகையில் வருணனை குறைவாக இருப்பதால் தலைமக்கள் உணர்வுகள் செறிவாக வெளிப்படுகின்றனு)

   A) 1, 3 சரி B) 1, 2 சரி C) 2, 3 சரி D) 2, 4 சரி

3. பொருத்துக.
   புலவர்கள் வாழ்ந்த காலம்
   a. கபிலர் - 1. 25 ஆண்டுகள்
   b. பரணர் - 2. 22 ஆண்டுகள்
   c. காக்கை பாடினியார் - 3. 55 ஆண்டுகள்
   d. பாலைக்கௌதமனார் - 4. 88 ஆண்டுகள்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 1 | 2 |
| B) | 2 | 3 | 4 | 1 |
| C) | 1 | 3 | 4 | 2 |
| D) | 2 | 3 | 1 | 4 |

4. நெடுநல்வாடையில் இடம்பெறும் பாவகை ............
   A) வஞ்சிப்பா B) கலிப்பா C) ஆசிரியப்பா D) வெண்பா

5. கீழ்க்காணும் பாடல் வரிகளை வரிசைப்படுத்துக.
   1. குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள்
   2. கன்று கோள் ஒழியக் கடிய வீசி
   3. மா மேயல் மறப்ப, மந்திர கூர
   4. பறவை படிவன வீழ, கறவை
   A) 2, 1, 3, 4 B) 4, 3, 2, 1
   C) 3, 4, 2, 1 D) 1, 2, 3, 4

6. பிற்காலத்தில் எழுந்த கோவை நூல்களுக்கு வித்திட்ட நூல் எது?
   A) குறிஞ்சிப்பாட்டு B) முல்லைப்பாட்டு
   C) மலைபடுகடாம் D) நெடுநல்வாடை

7. குறிஞ்சிப்பாட்டில் ‘உழுவை’ என்பது எதைக் குறிக்கிறது?

A) கரடி B) யானை C) புலி D) சிங்கம்

8. பொருத்துக.

| | | | | |
|---|---|---|---|---|
| a. | அரில் | - | 1. | கிணறு |
| b. | பெற்றம் | - | 2. | குற்றம் |
| c. | கூத்து | - | 3. | மாடு |
| d. | கூவல் | - | 4. | நாடகம் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 4 | 3 | 2 | 1 |
| C) | 3 | 4 | 1 | 2 |
| D) | 2 | 1 | 3 | 4 |

9. கணக்காயர் என்பதன் பொருள் என்ன?

A) விருந்தினர், B) நூலாய்ந்தவர், C) அரசர், D) புலவர்

10. பாடல் வரிகளை வரிசைப்படுத்துக.

1. குடி ஓம்ப வல்லான் அரசன் வடு இன்றி
2. மாண்ட குணத்தான் தவசி – என மூவர்
3. சீலம் அறிவான் இளங்கிளை சாலக்
4. யாண்டும் பெறற்கு அரியார்

A) 4, 2, 1, 3 B) 2, 1, 3, 4 C) 2, 1, 4, 3 D) 3, 1, 2, 4

11. பொருத்துக.

| | | | | |
|---|---|---|---|---|
| a. | இல்வாழ்க்கை | – | 1. | சிறப்பும் செல்வமும் |
| b. | அறன் வலியுறுத்தல் | – | 2. | விருந்தோம்பல் |
| c. | வான்சிறப்பு | – | 3. | குழந்தைச் செல்வம் |
| d. | மக்கட்பேறு | – | 4. | மழை |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4, | 3, | 1, | 2 |
| B) | 2, | 1, | 4, | 3 |
| C) | 3, | 1, | 4, | 2 |
| D) | 3, | 1, | 2, | 4 |

12. இயல்பினான் ....................... வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை

A) அறவாழ்க்கை B) இல்வாழ்க்கை

C) துறவறம் D) புறவாழ்க்கை

13. ஆராய்ந்தெழுதுக

1. தோடுடைய செவியன் எனத் தொடங்கும் பாடலை திருநாவுக்கரசர் பாடினார்.
2. ஞானசம்பந்தர் திருநெல்வாயில் அரத்துறை சென்றபோது இறைவனின் அருளால் முத்துபல்லக்கு முத்துக்குடை முத்துச்சின்னம் இவற்றை பெற்றார்.
3. திருஞானசம்பந்தருக்கு நம்பியாண்டார் நம்பியின் மகளை மணம் பேசினர்.
4. திருஞானசம்பந்தர் 'திருநீற்று பதிகம் பாடினார்.

A) 1, 2 சரி B) 1, 3 சரி C) 2,3,4 சரி D) அனைத்தும் சரி

14. பாண்டிய மன்னனின் வெப்புநோயை குணமடையச் செய்தவர் யார்?

A) சுந்தரர், B) திருநாவுக்கரசர்,
C) ஞானசம்பந்தர், D) பட்டிணத்தார்

15. நுதலிடைக் கண் கொண்டவன் யார்?

A) சிவபெருமான், B) திருமால், C) பிரம்மன், D) முருகன்

16. கோலியாத்தின் இடி சொல்லுக்கும், மின் பல்லுக்கும் உவமையாக தேம்பாவணி சுட்டுவது எது?

A) கரியமேகம், B) கரியகூந்தல், C) இமயமலை, D) எரிமலை

17. சிலப்பதிகாரம் கூறும் ஆயமகளின் குலதெய்வம் எது?

A) கணபதி, B) முருகன், C) கண்ணன், D) சிவன்

18. வரிசைப்படுத்துக.

A) காட்சிப்படலம், ஊர்தேடு படலம், கடல்தாவு படலம், உருக்காட்டு படலம்
B) கடல்தாவு படலம், ஊர்தேடு படலம், காட்சிப்படலம், உருக்காட்டு படலம்
C) ஊர்தேடு படலம், கடல்தாவு படலம், உருக்காட்டு படலம், காட்சிப்படலம்
D) கடல்தாவு படலம், உருக்காட்டு படலம், காட்சிப்படலம், ஊர்தேடு படலம்

19. ஆராய்ந்தெழுதுக.

1. சீறாப்புராணம் எழுத உமறுப்புலவருக்கு உதவியவர் வள்ளல் சீதக்காதி
2. சீறத் என்பது அரபுச்சொல்
3. இந்நூல் இரண்டு காண்டங்களை உடையது
4. சீறாப்புராணம் முற்றுப்பெற வள்ளல் அபுல்காசிம் மரைக்காயர் உதவினார்.

A) 1, 3 சரி B) 2, 3 சரி C) 1, 2, 3 சரி D) 1, 2, 4 சரி

20. சூடிக்கொடுத்த சுடர்க்கொடி .............

A) திருமழிசை ஆழ்வார், B) ஆண்டாள்,
C) திருமங்கையாழ்வார், D) கரைக்கால் அம்மையார்

21. பொருத்துக.

| | | | | |
|---|---|---|---|---|
| a. | விதிமுறை திறனாய்வு | – | 1. | Descriptive Criticism |
| b. | விளக்கமுறைத் திறனாய்வு | – | 2. | Historical criticism |
| c. | மதிப்பீட்டுமுறைத் திறனாய்வு | – | 3. | Inductive Criticism |
| d. | வரலாற்றுமுறைத் திறனாய்வு | – | 4. | Evaluative Criticism |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3, | 2, | 4, | 1 |
| B) | 3, | 1, | 4, | 2 |
| C) | 2, | 3, | 4, | 1 |
| D) | 4, | 3, | 2, | 1 |

22. சமுதாயத்தில் இதற்கு முன் தோன்றியுள்ள இலக்கிய மரபுகளை அடிப்படையாகக் கொண்டு இலக்கியங்களை ஆராயும் திறனாய்வு எது?

A) முருகியல் திறனாய்வு, B) செலுத்துநிலைத் திறனாய்வு,
C) மரபுவழித் திறனாய்வு, D) வரலாற்றுமுறைத் திறனாய்வு

23. ‘ Criticism’ என்னும் சொல் எந்த மொழிச் சொல்லில் இருந்து உருவானது?

A) ஆங்கிலம், B) வங்காளம், C) பாலி, D) கிரேக்கம்

24. ஆராய்ந்தெழுதுக.

1. இலக்கியங்களில் பொதிந்துள்ள பொதுதன்மையினைக் கண்டறிவது விளக்கமுறைத் திறனாய்வு
2. இலக்கியப்படைப்பை மற்றொரு இலக்கியப் படைப்போடு ஒப்பிடுவது ஒப்பீட்டுமுறைத் திறனாய்வு
3. இலக்கியம் படைக்கப்பட்ட காலத்தை ஒட்டி ஆராய்வது வரலாற்றுமுறைத் திறனாய்வாகும்.
4. இலக்கியப் படைப்பின் தரத்தை மதிப்பீடு செய்வது முடிபுமுறைத் திறனாய்வு

A) 1, 2 சரி B) 2, 3 சரி C) 3, 4 சரி D) 2, 4 சரி

25. ஒப்பிலக்கிய அறிமுகம் என்னும் நூலின் ஆசிரியர் யார்?

A) தமிழண்ணல் B) க.கைலாசபதி
C) .மு.வ D) வ.சுப.மாணிக்கம்

26. இடைநா இடை அண்ணத்தைத் தொடப் பிறக்கும் ஒலிகள்

A) ட, ண B) க, ங C) ச, ஞ D) ப, ம

27. வரிசைப்படுத்துக.

A) ஆத்தி மரம், கல்லும் காடும், ஊமையன், ஓடும் வரலாறு
B) ஆத்தி மரம், ஓடும் வரலாறு, ஊமையன், கல்லும் காடும்
C) ஊமையன், ஓடும் வரலாறு, ஆத்தி மரம், கல்லும் காடும்
D) கல்லும் காடும், ஊமையன், ஓடும் வரலாறு, ஆத்தி மரம்

28. முல்லைத்திணைக்குப் புறனான புறத்திணை எது?

A) வஞ்சி B) உழிஞை C) தும்பை D) வாகை

29. பொருத்துக.

| | | | | |
|---|---|---|---|---|
| a. | குயில்பாட்டு | – | 1. | சிற்பி |
| b. | ஒரு கிராமத்து நதி | – | 2. | பாரதிதாசன் |
| c. | ஆலாபனை | – | 3. | பாரதியார் |
| d. | தமிழச்சியின் கத்தி | – | 4. | அப்துல் ரகுமான் |

| | a, | b, | c, | d |
|---|---|---|---|---|
| A) | 4, | 1, | 3, | 2 |
| B) | 3, | 1, | 4, | 2 |
| C) | 2, | 3, | 4, | 1 |
| D) | 4, | 3, | 1, | 2 |

30. வஞ்சிப்பாவிற்குரிய ஓசை எது?

A) துள்ளல் ஓசை B) தூங்கல் ஓசை
C) அகவல் ஓசை D) செப்பலோசை

31. ஆராய்ந்தெழுதுக.

1. அப்துல்கலாம் பிறந்த ஊர் காயல்பட்டணம்
2. அக்கினி சிறகுகள் ஏவுகணையை மையமாகக் கொண்டது.
3. 31 ஆங்கில எழுத்துக்களைக் கொண்டது அப்துல் கலாமின் முழுபெயர்
4. தும்பா ராக்கெட் தளத்தில் முக்கிய பொறுப்பிலிருந்தார்

A) 1, 2 சரி B) 2, 3 சரி C) 2,3,4 சரி D) அனைத்தும் சரி

32. “அடித்தளிர்” இதில் வரும் அணி எது?

A) உவமை அணி B) உருவக அணி
C) ஏதுவணி D) ஒட்டணி

33. மாற்றிலக்கணக் கோட்பாட்டை உருவாக்கியவர்

A) சசூர் B) கால்டுவெல் C) சோம்ஸ்கி D) பைக்

34. நடு திராவிட மொழி எது?

A) கொலாமி B) துளு C) குருக் D) பிராகூயி

35. ஆராய்ந்தெழுதுக.

1. ஒரு கிராமத்து நதி என்னும் கவிதை ஆத்துப் பொள்ளாச்சி கிராமத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்டது.
2. மதுரை மாவட்டத்தைச் சார்ந்தது.
3. இதன் ஆசிரியர் சிற்பி பாலசுப்பிரமணியம்
4. இந்நூலுக்கு சாகித்ய அகாடமி விருது கிடைத்துள்ளது.

A) 1, 2 சரி B) 1, 4 சரி C) 1,3,4 சரி D) அனைத்தும் சரி

36. குருடன் என்பது .................... பெயராகும்

A) சினைப்பெயர் B) இயற்பெயர்
C) முதற்பெயர் D) விரவுப்பெயர்

37. திவாகர நிகண்டு எத்தனைத் தொகுதிகளைக் கொண்டது?
A) 13 B) 11 C) 10 D) 12

38. பொருத்துக.

| | | | | |
|---|---|---|---|---|
| a. | மு.வ | - | 1. | இயற்கைப் பாட்டு |
| b. | வ.சுப.மாணிக்கம் | - | 2. | தமிழ் வீரயுகப் பாடல் |
| c. | க.கைலாசபதி | - | 3. | இயற்கைப்புனைவு |
| d. | தனிநாயக அடிகளார் | - | 4. | தமிழ்க்காதல் |

| | a, | b, | c, | d |
|---|---|---|---|---|
| A) | 2, | 3, | 4, | 1 |
| B) | 3, | 1, | 4, | 2 |
| C) | 3, | 2, | 4, | 1 |
| D) | 3, | 4, | 2, | 1 |

39. வரிசைப்படுத்துக.
A) அம்புலிப் பருவம், முத்தப்பருவம், தாலப்பருவம், செங்கீரைப்பருவம்
B) செங்கீரைப்பருவம், தாலப்பருவம், முத்தப்பருவம், அம்புலிப் பருவம்
C) முத்தப்பருவம், தாலப்பருவம், செங்கீரைப்பருவம், அம்புலிப் பருவம்
D) தாலப்பருவம், செங்கீரைப்பருவம், அம்புலிப் பருவம், முத்தப்பருவம்

40. ஒன்றை வேறொன்றாகச் சிந்தித்துச் சொல்வது ............... அணியாகும்
A) உருவக அணி, B) உவமை அணி,
C) தற்குறிப்பேற்றவணி, D) அதிசயவணி

41. இஸ்லாமிய வட்டார வழக்குகளைப் பயன்படுத்தி நாவல்களைப் படைப்பவர்
A) அப்துல் ரகுமான், B) தோப்பில் முகமது மீரான்,
C) கண்ணதாசன், D) வாலி

42. பொருள் தரும் மிகச்சிறிய ஒலிக் கூறு .......................
A) ஒலியன் B) உருபன் C) .பொருளன் D) தொடரன்

43. ஆராய்ந்தெழுதுக.
1. கலம்பகம் என்பதற்கு கலவை என்பது பொருள்
2. நந்திவர்ம பல்லவனைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது.
3. கலம்பக உறுப்புகள் 13
4. ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்று

A) 1, 2 சரி B) 2, 3 சரி C) 3, 4 சரி D) 3, 1 சரி

44. திவாகர நிகண்டின் காலம் .................... ஆகும்
A) 9 ஆம் நூற்றாண்டு, B) 13 ஆம் நூற்றாண்டு,
C) 11 ஆம் நூற்றாண்டு, D) 12 ஆம் நூற்றாண்டு

45. பொருத்துக.

| | | | | |
|---|---|---|---|---|
| a. | வேய்புரைபணைத் தோள் | - | 1. | உருவகவணி |
| b. | கண்வண்டு | - | 2. | உவமை அணி |
| c. | பெயர்பொருள் பெற்று வருதல் | - | 3. | பின்வருநிலையணி |
| d. | முன்வந்த சொல்லே பின்னும் வருதல் | - | 4. | தற்குறிப்பேற்றம் |

| | a, | b, | c, | d |
|---|---|---|---|---|
| A) | 2, | 1, | 4, | 3 |
| B) | 3, | 2, | 1, | 4 |
| C) | 2, | 3, | 4, | 1 |
| D) | 2, | 3, | 1, | 4 |

46. சுப்பையன் என்னும் கதாப்பாத்திரம் இடம்பெறும் நாவல் .................

A) ஒரு மா மரமும் கொஞ்சம் பறவைகளும்

B) அளம்

C) சாய்வுநாற்காலி

D) மாணிக்கம்

47. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| a. ஐ | – | 1. | இரண்டாம் வேற்றுமை |
| b. ஆல் | – | 2. | ஏழாம் வேற்றுமை |
| c. கு | – | 3. | மூன்றாம் வேற்றுமை |
| d. கண் | – | 4. | நான்காம் வேற்றுமை |

| | a, | b, | c, | d |
|---|---|---|---|---|
| A) | 1, | 3, | 4, | 2 |
| B) | 2, | 3, | 4, | 1 |
| C) | 3, | 2, | 1, | 4 |
| D) | 3, | 1, | 4, | 2 |

48. தமிழில் தோன்றிய முதல் செய்யுள் நாடகம் எது?

A) மனோன்மணீயம் B) ஔவை

C) ஓர் இரவு D) இந்திரகுமாரி

49. வடமொழி தமிழ்மொழி இரண்டையும் பல இடங்களில் ஒப்பீடு செய்து கூறியவர் யார்?

A) உ.வே.சா B) நன்னூலார் C) தொல்காப்பியர் D) க.கைலாசபதி

50. பொருத்துக.

| | | | | |
|---|---|---|---|---|
| a. | வீரமாமுனிவர் | - | 1. | இருமொழி அகராதி |
| b. | சிதம்பரநாத செட்டியர் | - | 2. | ஒருமொழி அகராதி |
| c. | பி.தங்கவேலு | - | 3. | காலமுறை அகராதி |
| d. | சுகுஸ்தா | - | 4. | பன்மொழி அகராதி |

| | a, | b, | c, | d |
|---|---|---|---|---|
| A) | 2, | 1, | 4, | 3 |
| B) | 3, | 2, | 1, | 4 |
| C) | 4, | 2, | 3, | 1 |
| D) | 2, | 1, | 3, | 4 |

51. மனோன்மணியின் தோழியின் பெயர்............

A) வாணி B) ராணி C) வைதேகி D) சீதை

52. ஆராய்ந்தெழுதுக.

1. மகத்துக்கை என்பதை மக+அத்து+கை எனப்பிரிக்கலாம்
2. குன்றக்குடி என்பதை குன்று +அக்கு+குடி எனப்பிரிக்கலாம்
3. உருபிற்கு என்பதை உருபு+இன்+கு எனப்பிரிக்கலாம்
4. பரணியாற் கொண்டான் என்பதை பரணி+ஆன்+கொண்டான் எனப்பிரிக்கலாம்

A) 1, 3 சரி B) 1,2,3 சரி C) 2,4 சரி D) 2,3,4 சரி

53. 'காதல் காதல் காதல்
காதல் போயின் சாதல்' என்று பாடியவர்

A) பாரதியார் B) சிற்பி
C) பாரதிதாசன் D) அப்துல் ரகுமான்

54. ஆராய்ந்தெழுதுக.

1. முல்லைக்குரிய பெரும்பொழுது கார்
2. குறிஞ்சிக்குரிய பெரும்பெழுது முன்பனி
3. பாலைக்குரிய பெரும்பொழுது நன்பகல்
4. மருதத்திற்குரியப் பெரும்பொழுது எற்பாடு

A) 1, 2 சரி B) 1, 2, 3 சரி C) 2, 3, 4 சரி D) அனைத்தும் சரி

55. குற்றாலக் குறவஞ்சி குறிப்பிடும் மலை

A) இமயமலை B) பொதிய மலை
C) கைலாய மலை D) திரிகூட மலை

56. சூடகம் என்பது .................

A) கைவளை B) காலணி C) மூக்குத்தி D) கம்மல்

57. ஆராய்ந்தெழுதுக.

1. தோடா தென்திராவிட மொழியாகும்
2. கோண்டி வடதிராவிட மொழியாகும்
3. மால்தோ நடு திராவிட மொழியாகும்
4. கோண்டி நடுதிராவிட மொழியாகும்

A) 1, 2 சரி B) 1, 3 சரி C) 1, 4 சரி D) 3, 4 சரி

58. ஒரு மாமரமும் கொஞ்சம் பறவைகளும் என்னும் சிறுகதையில் இடம்பெற்றுள்ள கதாபாத்திரத்தின் பெயர் என்ன?

A) உலகநாதன் செட்டியர் B) முருகன்
C) கோபலன் D) ராதா

59. அடிமுறையை வரிசைப்படுத்துக.
A) குறளடி, சிந்தடி, நெடிலடி, அளவடி
B) குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி
C) சிந்தடி, குறளடி, நெடிலடி, அளவடி
D) சிந்தடி, நெடிலடி, அளவடி, குறளடி

60. 'எனதே கலைவளையும் என்னதே மன்னர்' என்னும் பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் எது?
A) நந்தி கலம்பகம் B) மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
C) பரணி D) குற்றால குறவஞ்சி

61. திணை அடிப்படையில் வரிசைப்படுத்துக
A) மாயோன், சேயோன், வேந்தனன், வருணன்
B) சேயோன், மாயோன், வருணன், வேந்தன்
C) வருணன், வேந்தன், சேயோன், மாயோன்
D) மாயோன், சேயோன், வருணன், வேந்தன்

62. காலந்தோறும் பெண் என்னும் நூலின் ஆசிரியர் யார்?
A) இராஜம் கிருஷ்ணன் B) சு.தமிழ்ச் செல்வி
C) இன்குலாப் D) சிற்பி

63. பொருத்துக.

| | | | | |
|---|---|---|---|---|
| a. | தந்தை | - | 1. | சுந்தர முனிவர் |
| b. | ஞானதந்தை | - | 2. | புருஷோத்தமன் |
| c. | மந்திரி | - | 3. | ஜீவகன் |
| d. | காதலன் | - | 4. | குடிலன் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3, | 1, | 4, | 2 |
| B) | 2, | 1, | 4, | 3 |
| C) | 4, | 3, | 1, | 2 |
| D) | 2, | 3, | 4, | 1 |

64. அக்னிச் சிறகு எவ்வகை நூல்?
A) ஆய்வு நூல் B) சுயசரிதம்
C) வரலாற்று நூல் D) அறிவியல் நூல்

65. கால அடிப்படையில் வரிசைப்படுத்துக.
A) மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளு
B) கன்னடம், மலையாளம், தெலுங்கு, துளு
C) தெலுங்கு, மலையாளம், துளு, கன்னடம்
D) துளு, மலையாளம், தெலுங்கு, கன்னடம்

66. ஆராய்ந்தெழுதுக.
1. கூகை அலறினால் சாவு வரும்
2. காகம் கரைந்தால் விருந்தினர் வருவர்
3. சுப காரியங்கள் பேசும் போது விளக்கு அணைந்தால் நல்ல சகுனம்
4. தன்னை ஒருவர் நினைத்தால் தும்மல் வரும்.

A) 1,2சரி B) 1,3சரி C) 2,3,4சரி D) 1,2,4 சரி

67. கிரியைகள், வேள்விகள் பற்றி கூறும் வேதம் எது?

A) ரிக் B) யசூர் C) சாம D) அதர்வணம்

68. பெருத்துக.

| | | | |
|---|---|---|---|
| a. | முதல் தலைமுறை கணினிகள் | - 1. | டிரான்சிஸ்டர் 1960 |
| b. | .இரண்டாம் தலைமுறை கணினிகள் | - 2. | மைக்ரோ புரோஸர் 1975 |
| c. | முன்றாம் தலைமுறை கணினிகள் | - 3. | இன்டிக்கிரேடட் சர்க்கியூட்ஸ் I.C 1966 |
| d. | நான்காம் தலைமுறை கணினிகள் | - 4. | மின்னணு வால்வு 1950 |

| | a, | b, | c, | d |
|---|---|---|---|---|
| A) | 3, | 2, | 4, | 1 |
| B) | 4, | 1, | 3 | 2 |
| C) | 1, | 4, | 3, | 2 |
| D) | 2, | 3, | 1, | 4 |

69. மீனவர்களால் ஆடப்படும் ஆட்டம் எது?

A) கரடியாட்டம் B) பூத ஆட்டம்
C) பேய் ஆட்டம் D) பொடிக்கழி ஆட்டம்

70. ஆராய்ந்தெழுதுக.
1. உபநிடதங்கள் பண்டைய இந்திய தத்துவ இலக்கியங்களாகும்.
2. சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டவை.
3. குரு – சீடன் இடையே நடக்கும் உரையாடலாக அமைந்துள்ளனு)
4. வேதாந்தம் எனவும் இதனைக் கூறுவர்.

A) 1,2சரி B) 2, 3சரி C) 1,2, 3சரி D) அனைத்தும் சரி

71. மூங்கில் மேல் நடந்து சென்று நடத்தப்படும் கூத்து

A) கழைக்கூத்து B) தெருக்கூத்து
C) மரப்பாவைக்கூத்து D) தோற்பாவைக்கூத்து

72. சாலச் சிறந்தது என்பது எது?

A) தனிமொழி B) பொதுமொழி
C) தொடர் மொழி D) எதிர்மொழி

73. பின்வருவனவற்றுள் இராமாயணத்துடன் தொடர்புடைய பழமொழி எது?
A) காக்கைக்கு தன் குஞ்சு பொன் குஞ்சு
B) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
C) அணில் குஞ்சும் தன்னாலானது
D) கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம்

74. ‘ஔவை’ நாடகத்தின் ஆசிரியர் ..........
A) இன்குலாப் B) தமிழ்ச்செல்வி
C) சிற்பி D) அப்துல் ரகுமான்

75. வரிசைப்படுத்துக.
A) தெய்வப்பெயர்த்தொகுதி, மக்கட் பெயர்த் தொகுதி, விலங்கின் பெயர்த் தொகுதி, மரப்பெயர்த்தொகுதி
B) மரப்பெயர்த் தொகுதி, விலங்கின் பெயர்த் தொகுதி, மக்கட் பெயர்த் தொகுதி, தெய்வப்பெயர்த் தொகுதி
C) விலங்கின் பெயர்த் தொகுதி, மக்கட் பெயர்த் தொகுதி, தெய்வப்பெயர்த் தொகுதி, மரப்பெயர்த்தொகுதி
D) மக்கட் பெயர்த் தொகுதி, விலங்கின் பெயர்த் தொகுதி, மரப்பெயர்த்தொகுதி, தெய்வப்பெயர்த் தொகுதி

76. பாரதியார் ஆசிரியராக பணியாற்றிய இதழ் எது?
A) யங் இந்தியா B) தேசபக்தன் C) இந்தியா D) ஞானபானு

77. பின்வருவனவற்றுள் தனித்து நிற்பது?
A) விக்கிபீடியா B) இ-மெயில்
C) இன்ஸ்டாகிராம் D) இ- நூலகம்

78. பொருத்துக.

| | | | | |
|---|---|---|---|---|
| a. | குமரகம் | - | 1. | கோயிற்கலை |
| b. | கோவளம் | - | 2. | உப்பளம் |
| c. | மாமல்லபுரம் | - | 3. | படகுவிடுதி |
| d. | வட்டக்கோட்டை | - | 4. | கடற்கரை |

| | a, | b, | c, | d |
|---|---|---|---|---|
| A) | 2, | 1, | 3, | 4 |
| B) | 3, | 4, | 1, | 2 |
| C) | 2, | 3, | 1, | 4 |
| D) | 4, | 1, | 2, | 3 |

79. உடலை இயக்கும் சக்தி எது?
A) பிரம்மம் B) ஆத்மா C) பிரபஞ்சம் D) ஆப்தவாக்கியம்

80. கேரளத்திலுள்ள ‘தேக்கடி’ சுற்றுலா மையத்தின் சிறப்பு
A) படகுசவாரி B) யானைசவாரி
C) மலையேற்றம் D) கடற்கரை

81. ‘Menu Bar’ என்பதன் தமிழாக்கம் என்ன?

A) பட்டியல் பட்டை, B) தலைப்புப் பட்டை,

C) வரிசைப்பட்டை, D) அட்டவணைப்பட்டை

82. ஆராய்ந்தெழுதுக.

1. இலா என்ற பெண்ணிற்கு வெண்ணெய் அப்பிய கையுடையவள் என்று பொருள்
2. இவள் வெண்ணெய் விட்டு அக்னி வளர்க்கும் மாண்புடையவள்
3. அக்னி தேவனின் அன்னை என்று புகழப்படுகிறாள்
4. இலா என்பது தெய்வம்

A) 1,4 சரி B) 3,4 சரி

C) 1,2,3 சரி D) அனைத்தும் சரி

83. அமைப்பியல் என்பது ஆங்கிலத்தில் .................. எனப்படுகிறது.

A) Structuralism B) Surrealism

C) Symbolism D) Modernism

84. காலவரிசைப்படுத்துக.

A) இலக்கிய விமரிசனம், விமரிசனக் கலை, இலக்கியக் கலை, திறனாய்வுக் கலை

B) விமரிசனக் கலை, இலக்கிய விமரிசனம், இலக்கியக் கலை, திறனாய்வுக் கலை

C) விமரிசனக் கலை, இலக்கியக் கலை, திறனாய்வுக் கலை, இலக்கிய விமரிசனம்

D) இலக்கியக் கலை, திறனாய்வுக் கலை, இலக்கிய விமரிசனம், விமரிசனக் கலை

85. பண்பாட்டு மானிடவியல் என்னும் நூலின் ஆசிரியர் யார்?

A) பக்தவத்சல பாரதி B) சுப்பிரபாரதி மணியன்

C) சு.வெங்கடேசன் D) தர்மராஜன்

86. ஆராய்ந்தெழுதுக.

1. இதழியலின் தந்தை என்றறியப்படுபவர் ஜீலியஸ் சீசர்
2. அசோகரின் கல்வெட்டுக்களை இதழ்களின் முன்னோடியாகக் கொள்ளலாம்.
3. கி.பி.1790 இல் அரேபியர்கள் பாக்தாதில் காகித ஆலை நிறுவினர்
4. தமிழ்நாட்டில் முதல் அச்சகம் தரங்கம்பாடியில் அமைக்கப்பட்டது.

A) 1,3சரி B) 2,3சரி

C) 1,2,4சரி D) அனைத்தும் சரி

87. பொருத்துக.

| | | | | |
|---|---|---|---|---|
| a. | தேவராட்டம் | - | 1. | காளியின் வேடம் |
| b. | காவடியாட்டம் | - | 2. | மாரியம்மன் |
| c. | கரகாட்டம் | - | 3. | முருகன் |
| d. | சிம்ம ஆட்டம் | - | 4. | சக்கமாதேவி |

| | a, | b, | c, | d |
|---|---|---|---|---|
| A) | 2, | 3, | 4, | 1 |
| B) | 3, | 4, | 2, | 1 |
| C) | 3, | 1 , | 4, | 2 |
| D) | 4, | 3, | 2, | 1 |

88. பின்வருவனவற்றுள் வேறுபட்டு நிற்பது எது?

A) மரப்பசு B) பள்ளிக்கொண்டபுரம்
C) வன்மம் D) சிலநேரங்களில் சில மனிதர்கள்

89. பின்நவீனத்துவத்தின் காலகட்டம் எது?

A) 18 ஆம் நூற்றாண்டு B) 19 ஆம் நூற்றாண்டு
C) 20 ஆம் நூற்றாண்டு D) 21 ஆம் நூற்றாண்டு

90. தலித்தியத் திறனாய்வாளராக போற்றப்படுபவர் யார்?

A) ராஜ்கௌதமன் B) அழகிய பெரியவன்
C) கைலாசபதி D) தி.சு.நடராசன்

91. ஆராய்ந்தெழுதுக.

1. நவீனத்துவம் என்பது பழமையை மாற்றி புதுமையில் ஆக்குவது
2. பழமையை முற்றிலுமாக நவீனத்துவத்தால் அழிக்கமுடியவில்லை
3. பழமைக்கும் புதுமைக்கும் போராட்டம் நிகழ்வதில்லை
4. கலை இலக்கியத்தில் நவீனத்துவத்தால் மாறுபாடு ஏற்படவில்லை.

A) 2,3சரி B) 1,3 சரி C) 1,2 சரி D) அனைத்தும் சரி

92. பனுவலை மையமிட்டு அமைகின்ற பெண்ணியத் திறனாய்வு எது?

A) மார்க்ஸியப் பெண்ணியம் B) அமெரிக்கப் பெண்ணியம்
C) மிதவாதப் பெண்ணியம் D) பிரெஞ்சுப் பெண்ணியம்

93. பரிதிமாற் கலைஞர் என்று தம் பெயரை மாற்றிக்கொண்ட தமிழறிஞர் யார்?

A) கலியாணசுந்தரனார் B) மறைமலையடிகள்
C) சூரியநாராயண சாஸ்திரி D) நீலகண்ட சாஸ்திரி

94. திருக்குறளை இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தவர்

A) பெஸ்கி பாதிரியார் B) ஜி.யு)போப்
C) எல்லீஸ் D) கால்டுவெல்

95. செய்யுள் மொழிபெயர்ப்பை 'ஒரு நிலத்துப் பயிரை வேரோடு பறித்து வேறொரு நிலத்தில் நடுவதைப் போன்றது' என்று கூறியவர் யார்?

A) ஜீரிலோத்மன் B) ஏ.கே.இராமனுஜம்

C) காசிம் அமின் D) லெனார்டு

96. பொருத்துக.

| | | | | |
|---|---|---|---|---|
| a. | Poetics | - | 1. | ஆசிய ஜோதி |
| b. | Light of Asia | - | 2. | மனோன்மணீயம் |
| c. | Paradise Lost | - | 3. | சொர்க்க நீக்கம் |
| d. | Secret way | - | 4. | கவிதையியல் |

| | a, | b, | c, | d |
|---|---|---|---|---|
| A) | 3, | 2, | 4, | 1 |
| B) | 2, | 1, | 3, | 4 |
| C) | 4, | 1, | 3, | 2 |
| D) | 1, | 3, | 4, | 2 |

97. பெருங்கதையின் மூலநூல் எது?

A) ஸ்ரீபுராணம் B) பிரபுலிங்கலீலா

C) பிருகத்கதா D) தம்மபாதம்

98. ஆராய்ந்தெழுதுக.

1. ஆய்தல் என்ற சொல் தொல்காப்பியர் காலத்திலிருந்து இன்றுவரை வழக்கற்று விடாத சொல்லாகும்.
2. ஆராய்பவனைத் திவாகர நிகண்டு அறிஞன் எனக் குறிக்கின்றது.
3. ஆராய்வான் என்ற சொல்லையும் திருவள்ளுவர் பயன்படுத்துகிறார்.
4. நட்புக்கொள்ளுமுன் ஆராய்ச்சி வேண்டுமென்பர் திருவள்ளுவர்.

A) 1,2சரி B) 2,3சரி C) 1,3,4சரி D) அனைத்தும் சரி

99. வரிசைப்படுத்துக.

A) தரவுகளைத் தொகுத்தல், பகுத்தாராய்தல், இயல்பிரித்தல், துணைநூற்பட்டியல்

B) பகுத்தாராய்தல், இயல்பிரித்தல், துணைநூற்பட்டியல், தரவுகளைத் தொகுத்தல்

C) பகுத்தாராய்தல், இயல்பிரித்தல், தரவுகளைத் தொகுத்தல், துணைநூற்பட்டியல்

D) தரவுகளைத் தொகுத்தல், பகுத்தாராய்தல், துணைநூற்பட்டியல், இயல்பிரித்தல்

100. வீரநிலைக் காலச் செய்யுள் என்னும் ஆய்வு நூலின் ஆசிரியர் யார்?

A) சி.எம்.பௌரா B) உ.வே.சா

C) என்.கே.சாட்விக் D) மு.வ

101. தொல்காப்பியர் கூறும் ஆய்வு நுணுக்கத்தை வரிசைப்படுத்துக.
A) ஓய்தல், நிழத்தல், சாஅய், ஆய்தல்
B) சாஅய், ஆய்தல், ஓய்தல், நிழத்தல்
C) ஓய்தல், ஆய்தல், நிழத்தல், சாஅய்
D) ஆய்தல், ஓய்தல், நிழத்தல், சாஅய்

102. முச்சங்கம் பற்றி முதலில் கூறிய நூல் எது?
A) தொல்காப்பியம்
B) நன்னூல்
C) இறையனார் அகப்பொருள்
D) தண்டியலங்காரம்

103. ‘ஆட்டனத்தி ஆதிமந்தி’ என்னும் நூலின் ஆசிரியர்?
A) கண்ணதாசன் B) புதுமைபித்தன்
C) வல்லிக்கண்ணன் D) மறைமலையடிகள்

104. பொருத்துக.

| | | | | |
|---|---|---|---|---|
| a. | பதித பங்கஜம் | - | 1. | தோமாக்கத்தனார் |
| b. | வர்த்தமானப்புத்தகம் | - | 2. | தகழி |
| c. | இந்துலேக | - | 3. | ஸி.வி.ராமன் பிள்ளை |
| d. | தர்மராஜா் | - | 4. | சந்துமேனோன் |

| | a, | b, | c, | d |
|---|---|---|---|---|
| A) | 4, | 1, | 3, | 2 |
| B) | 3, | 2, | 4, | 1 |
| C) | 1, | 3, | 4, | 2 |
| D) | 2, | 1. | 4, | 3 |

105. வரிசைப்படுத்துக.
A) தும்பை, வெட்சி, வஞ்சி, உழிஞை
B) வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை
C) வஞ்சி, வெட்சி, தும்பை, உழிஞை
D) உழிஞை, வஞ்சி, வெட்சி, தும்பை

106. ஆராய்ந்தெழுதுக.
1. மொகஞ்சதாரோ ஹரப்பா ஆகிய இரு நகரங்கள் இந்தியாவில் உள்ளனு)
2. மொகஞ்சதாரோ ஆதிகாலத்தில் சிறப்புற்று விளங்கியது.
3. மொஹஞ்சதாரோ இன்றும் செல்வ செழிப்பில் உள்ளது
4. மொகஞ்சதாரோவில் வெளிநாட்டு வணிகம் நடைபெறவில்லை.

A) 1,3சரி B) 1,4சரி C) 1,2சரி D) 2,3சரி

107. 1498 இல் இந்தியாவை வந்தடைந்த போர்ச்சுகீசிய மாலுமி யார்?
A) யுவான் சுவாங், B) வாஸ்கோட காமா
C) பாதிரி டீ காங்டா D) ஆபிரகாம் ரோசர்

108. பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு?
A) கி.பி 1602 B) கி.பி 1601 C) கி.பி.1603 D) கி.பி.1600

109. “திருமகள் போல பெருநிலச் செல்வியும்” இக்கல்வெட்டு யாருடைய மெய்கீர்த்தியைக் கூறுகிறது?
A) இராஜராஜசோழன் B) இராஜேந்திரசோழன்
C) விசாலாயசோழன் D) கரிகாற்சோழன்

110. சேரநாட்டின் துறைமுகம் எது?
A) தொண்டி B) வஞ்சி C) கரூர் D) பூம்புகார்

111. மலையாள மொழியின் முதல் இலக்கண நூல் எது?
A) லீலா திலகம் B) கேரள பாணினீயம்
C) கேரளகௌமுதி D) குண்டர்ட் இலக்கணம்

112. ஆராய்ந்தெழுதுக.
1. முப்பெருங்கவிஞர்களில் ஒருவர் குமாரனாசான்
2. வீணபூவு காவியம் இவரால் இயற்றபட்டது
3. இவருக்கு ஞானபீட பரிசு கிடைத்துள்ளது.
4. பிறர் கவிதையினின்று இவரை வேறுபடுத்துவது தத்துவச்சிந்தனை ஆகும்

A) 1, 3 சரி B) 2, 3 சரி C) 1, 2,4 சரி D) அனைத்தும் சரி

113. உலகிலுள்ள தமிழ்ச்சுவடிகளுக்கு அகராதி தயாரித்து வெளியிட்ட பல்கலைக்கழகம் எது?
A) தமிழ்ப் பல்கலைக்கழகம்
B) பெரியார் பல்கலைக்கழகம்
C) கேரளப் பல்கலைக்கழகம்
D) சென்னைப் பல்கலைக்கழகம்

114. தமிழ்நாட்டில் அகழ்வாராய்சி நடைபெற்ற இடம்
A) அரிக்கமேடு B) மசூலிப்பட்டணம்
C) தஞ்சாவூர் D) பட்டணம்

115. வரிசைப்படுத்துக.
A) தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ்
B) மடல், ஓலை, ஏடு, இதழ், தோடு
C) ஓலை, ஏடு, இதழ், தோடு, மடல்
D) ஏடு, இதழ், தோடு, மடல், ஓலை

116. இணை, கற்றை, கட்டு, பொத்தகம் என்னும் பெயர்களில் வழங்கப்படுவது
A) புத்தகம் B) சுவடி C) நூல் D) இலக்கணம்

117. பின்வரும் மொழிகளில் திராவிடமொழி அல்லாதது எது?

A) தமிழ்
B) மலையாளம்
C) இராஜ்மஹால்
D) பாலி

118. சுவடிகளிலிருந்து பெரும்பாலான தமிழ் நூல்களைப் பதிப்பித்தவர்

A) உ.வே.சா
B) வையாபுரிப்பிள்ளை
C) தமிழண்ணல்
D) மறைமலையடிகள்

119. பத்திரிகைதான் நாட்டுச் சுதந்திரத்தின் மிகபெரிய காவலாளி என்று கூறியவர் யார்?

A) மேத்யூ அர்னால்டு
B) ஜி.எப்.மோட்
C) லார்டு கிரே
D) ஹரால்டு பெஞ்சமின்

120. வரிசைப்படுத்துக.

A) லலிதா பிரசனோதையா, மெட்ராஸ் டைம்ஸ், ஜனவிநோதினி, தினவர்த்தமானி
B) தினவர்த்தமானி, மெட்ராஸ் டைம்ஸ், ஜனவிநோதினி, லலிதா பிரசனோதையா
C) மெட்ராஸ் டைம்ஸ், ஜனவிநோதினி, தினவர்த்தமானி, லலிதா பிரசனோதையா
D) ஜனவிநோதினி, லலிதா பிரசனோதையா, தினவர்த்தமானி, மெட்ராஸ் டைம்ஸ்

---